பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 01 வியாழக்கிழமை (17-09-1992) UTHAVAN — A Lively National Tamil Daily கதிர் 294

# ஜெயலலிதாவுக்கு எதிராக தி.மு.க.வினர் நேற்று பேரணி

## ஊழல் குற்றச்சாட்டு மனு கையளிப்பு

சென்னை, செப்டம்பர் 17

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக கருணாநிதி தலைமையில் தி. மு. க. வினர் நேற்று சென்னையில் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்த பேரணியின் இறுதியில் ஜெயலலிதாவுக்கும் அவரது அமைச்சர்கள் சிலருக்கும் எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு, மாநில ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங்கிடம் கையளிக்கப்பட்டது.

முதலமைச்சருக்கும், அமைச்சர்கள் சிலருக்கும் எதிராக மனுவில் 18 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

100 கோடி இந்திய ரூபா லஞ்சம் பெறப்பட்டிருப்பதாகவும் —

முதலமைச்சர் மீதும் ஏனையோர் மீதும் வழக்குத் தொடர அனுமதி வழங்குமாறும் — மனுவில் கோரப்பட்டுள்ளது.

### ஜெயா பப்ளிக்கேஷன்ஸ்

தாம் பிரதம பங்காளியாக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் என்ற பிரசுர நிறுவனத்தின் மூலமாக முதலமைச்சர் ஜெயலலிதா சென்னையில் நிலமதிப்புள்ள அரசாங்கக் காணி ஒன்றை வெறும் சில்லறை விலைக்குப் பெற்றுக் கொண்டார்.

அமைச்சராக இருக்கும் ஒருவர் தனது பதவிக் காலத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 35 எம்.எல்.ஏ.க்கள் 4எம்.பிக்கள் அ.தி.மு.கவிலிருந்து விலகலாம்

சென்னை, செப். 17

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து நான்கு எம். பிக்களும் 35 எம். எல். ஏக்களும் விலக இருப்பதாக புதுடில்லியில் இருந்து வெளிவரும் இரண்டு பிரபல ஆங்கில நாளிதழ்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

புதுடில்லி, பம்பாய், கல்கத்தா உட்பட ஐந்து முக்கிய நகரங்களில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில நாளிதழான 'எகொனொமிக் ரைம்ஸ்' வெளியிட்டுள்ள செய்தியில்—

11 எம். பிக்களைக் கொண்ட அ. தி. மு. க. நாடாளுமன்றக் குழு, ஜனதா தள் கட்சி பாணியில் பிளவுபடுவது தவிர்க்க முடியாதது என்ற கருத்து உருவாகியுள்ளது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. அதிருப்தி கோஷ்டியைச் சேர்ந்த இரண்டு முன்னாள் மாநில அமைச்சர்களான க. ரசாராம், வி. வி. சாமிநாதன் ஆகியோர் அண்மையில் புதுடில்லிக்குச் சென்று, இந்திரா காங்கிரஸின் மூத்த தலைவர்கள் சிலரைச் சந்தித்துப் பேசினார்கள். தமிழக காங்கிரஸ் விவகாரங்களைக் கவனித்து வரும் காங்கிரஸ் தலைவர்களையும் இவர்கள் சந்தித்தனர்.

### சுப்பிரமணிய சுவாமி

ஜனதா தள், தெலுங்கு தேசம் மற்றும் சிவசேனா ஆகிய கட்சிகளில் அண்மையில் இடம்பெற்ற கட்சித்தாவலுக்கும் தாமே காரணம்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு நிகழ்வுகள் சமூக பணிக்கு முக்கியத்துவம்

யாழ்ப்பாணம், செப். 17

தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகளின் இரண்டாம் நாளான நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் உண்ணாவிரதம், சிரமதானம் மற்றும் சமூகப்பணிகளும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

உண்ணாவிரதம், சிரமதான நிகழ்வுகளில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கை முதல் நாளை விட நேற்று அதிகரித்துக் காணப்பட்டது.

கிராமப் பகுதிகளில் மக்கள் ஆர்வத்துடனும் உணர்வு பூர்வமாகவும் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டதாக உதயன் பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

பல கிராமங்களில் வீட்டுக்கு வீடு, சந்திக்குச் சந்தி, கடைக்கு கடை கொடிகள் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றன.

கோட்ட, வட்ட மட்டங்களில் உண்ணாவிரதம், சிரமதானம் என்பனவற்றில் மக்கள் எழுச்சியுடன் பங்குபற்றினர்.

தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் நேற்றுப் பெருந்திரளான மக்கள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் ஏராளமான மக்கள் சமூகசேவைப் பணிகளில் ஈடுபட்டனர். பாடசாலை மாணவர்களும், சனசமூக நிலையப் பிரதிநிதிகளும் வீதிகளில் சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர்.

கோப்பாய், இருபாலை பகுதி வீதிகளும், [illegible]

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி எங்கும் திலீபன் நினைவு நிகழ்வுகள்

முறிகண்டி, செப். 17

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டம் எங்கும் பரந்தளவில் நடைபெறுகின்றன.

நினைவு நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின.

பிரதான வீதிகள், முக்கிய சந்திகள், மக்கள் கூடும் இடங்களிலும் கடைகள், வீடுகளின் முன்னாலும் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு மலரஞ்சலியும், தீபாஞ்சலியும் செய்யப்படுகின்றன. திலீபனின் உரைகள், அவரை நினைவு கூரும் பாடல்கள் என்பனவும் ஒலிபரப்பப்படுகின்றன.

கிளிநொச்சி நகரத்தில் எல்லாக் கடைகளின் முன்னாலும் தோரணங்கள் கட்டிப் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டு திலீபனின் படங்களுக்கு மங்கள விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்படுகிறது.

கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் நாளாந்தம் உண்ணா நோன்பு அனுஷ்டித்து வருகின்றனர். ([illegible])

## ஆனையிறவு, முல்லை: புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 17

ஆனையிறவுப் பகுதியிலும், முல்லைத்தீவிலும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடத்தினர்.

திங்கட்கிழமை இரவு ஆனையிறவிலும், நேற்றுக் காலை முல்லைத்தீவிலும் இராணுவத்தினர் தாம் நிலைகொண்டிருந்த இடங்களில் இருந்து சிறிது நகர முயன்றனர்.

அப்போது இரு சாராருக்கும் இடையில் கடும் மோதல்கள் நடைபெற்றதாக அறிய வந்தது.

இந்த இரண்டு சம்பவங்களும் நடந்ததை பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (அ)

## கொக்கட்டிச்சோலை படுகொலை வழக்கு 22இல்

### 20 சிப்பாய்கள் மீது குற்றப்பத்திரம்

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 20 இராணுவத்தினர் மீதான இராணுவ நீதிமன்ற விசாரணை இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

தற்போது இராணுவத்தினரின் பொறுப்பில் உள்ள பழைய மட்டக்களப்பு மாநகர சபை கட்டடத்தில் இவ்விசாரணை நடைபெறும் என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்றத்தில் மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவத்தினரில் ஒருவர் கனிஷ்ட அதிகாரியாவார்.

கொக்கட்டிச்சோலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற இப்படுகொலையில் 67 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் (இ-எ)

## இராஜகாரியர் நியமனம்: சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்துவதே நோக்கமாம்

கொழும்பு, செப். 17

சகஜநிலை திரும்பிய பகுதிகளில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த உதவும் நோக்கத்துடனேயே கலைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் பதவியை தாம் மீண்டும் ஏற்றுள்ளதாக திரு. பொன்ராம் இராஜகாரியர் கூறியிருக்கிறார்.

இவ்வாறு 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் உள்ள தலைமைத்துவ சூன்ய நிலையை நிரப்ப எடுக்கப்படும் அரசியல் சூழ்ச்சி இது என்று ராஜகாரியரின் கூற்றை ரெலோ அமைப்பும் தமிழ்க் காங்கிரஸும் நிராகரித்துவிட்டன என்றும் 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜகாரியர் மீண்டும் அவைத் தலைவர் பதவியை ஏற்றிருப்பது ஓர் அரசியல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் மீண்டும் நெற் காப்புறுதித் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெற்காப்புறுதித்திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ். அரச அதிபரின் வேண்டுகோளை அடுத்து இதற்கான அனுமதியை கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைவர் வழங்கியுள்ளார்.

இதனை அடுத்து இவ்வருடம் காலபோக நெற்செய்கைக்கான காப்புறுதிக்கட்டுப் பணத்தை விவசாயிகளிடமிருந்து ஏற்பதற்கான ஏற்பாடுகளை காப்புறுதிச் சபையின் யாழ். பிராந்திய நிலையம் செய்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
நீர் கிடைக்கும் போதே சேர்த்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கரையோரப் பகுதி மீனவர்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த மீனவர்களின் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் கிராமசேவையாளர்களினால் பெறப்பட்டு வருகின்றன.

இவற்றுக்குப் பதிலாக இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட 'இ'' உணவு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ''இ'' உணவு அட்டையின் குடும்ப எண்ணிக்கையின்படி ஒவ்வொரு வாரமும் இலவச உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடல் தொழிலால் பாதிக்கப்பட்ட சுமார் 3773 மீனவ குடும்பங்களுக்கு இந்நிவாரணம் வழங்கப்படும்.

(இ-28 17)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், செப். 17

ஓய்வூதியம் பெறுவோர் செப்டம்பர் மாத ஓய்வூதியத்தை இன்று முதல் வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இக்கொடுப்பனவுக்கான வவுச்சர், காசோலை என்பன நேற்று செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

[இ-ம]

## 50 சதம் கொள்ளை லாபம் கொலையில் முடிவு

கொழும்பு, செப். 17

ஒரு கோப்பை தேநீருக்கு 50 சதம் கூடுதலாக வாங்கிய கடை முதலாளி ஒருவர் வாடிக்கையாளரால் அடித்துக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் இறந்தவர் எம். சமரவிக்ரம (24 வயது) எனவும் இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்கா பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-10]

# அங்கவீனரான படையினர் பங்கு பற்றிய போட்டிகள்

கொழும்பு, செப். 17

வடக்கு - கிழக்கு இராணுவ நடவடிக்கைகளின்போது தமது உடல் உறுப்புகளை இழந்து அங்கவீனரான படையினர் பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பாணந்துறைக்கு அண்மையிலுள்ள வாதுவ நகரில் அமைந்திருக்கும் இராணுவ ஹோட்டல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் கால்பந்து, கிரிக்கெட், நீச்சல் என்பவை இடம்பெற்றன.

[இ-10]

## நீண்ட நாட்களின் பின் நேற்று மழை

நீண்ட வரட்சியின் பின்னர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நேற்று நண்பகல் சுமாரான மழை பெய்தது.

இன்று பிற்பகலிலும் நாடு முழுவதிலும் மழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

[இ-28-10]

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை 23ஆம் திகதி

## பூந்தமல்லி நீதிமன்றில் ஆரம்பம்

சென்னை, செப். 17

ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக தமிழில் தயாரிக்கப்பட்டு வரும் குற்றப் பத்திரிகை எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படும் என்றும் வழக்கு விசாரணை எதிர்வரும் 23 ஆம் திகதி பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கின் சி. பி. ஐ. குற்றப் பத்திரிகை கடந்த மே மாதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு செங்கல்பட்டு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த 26 பேருக்கும் அந்தக் குற்றப் பத்திரிகையின் பிரதிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் குற்றப் பத்திரிகையை தமக்கு தமிழில் தர வேண்டும் என சம்பந்தப்பட்ட 26 பேரும் கோரியதை அடுத்து சி. பி. ஐயினர் அந்தக் குற்றப் பத்திரிகையை தற்போது தமிழில் தயாரித்து வருகின்றனர்.

[இ-5]

## 35 எம். எல். ஏக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் ஜனதா தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியையும் அ. தி. மு. க. அதிருப்தித் தலைவர்கள் சந்தித்தனர்.

அ. தி. மு. கவின் பதினொரு எம். பிக்களில் குறைந்தது 4பேர் பல்வேறு காரணங்களுக்காக அ. தி. மு. கவில் இருந்து வெளியேறி அதிருப்தி கோஷ்டியில் சேரத்தயாராக இருப்பதாக நம்பத்தகுந்த வட்டார தகவல்கள் கூறுகின்றன.

— இப்படி 'எகொனொமிக் டைம்ஸ்' நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நடராஜன்

இதே வேளை —

'இண்டிபெண்டென்ற்' என்ற பிரபல ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தி ஒன்றில் அ. தி. மு. க. மாநில சட்ட சபை உறுப்பினர்களில் 35 பேர் அ. தி. மு. கவை விட்டு விலகத் தயாராகிவிட்டனர்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதா தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அண்மையில் சென்னையில் அ. தி. மு. க. அதிருப்தியாளர்களுடன் பேசினார்.

முன்னாள் மாநில அமைச்சர்கள் ராசாராம், வி. வி. சாமிநாதன், திருநாவுக்கரசு, பொன்னையன், முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் ஆகியோருடன் சுப்பிரமணியம் சுவாமி பேச்சுகள் நடத்தினார். அச்சந்திப்பில் துக்ளக் ஆசிரியர் சோ மற்றும் ஜெயலலிதாவின் நெருங்கிய சகாவாக முன்னர் விளங்கிய நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நடராஜனின் மனைவி சசிகலா ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவர். ஜெயலலிதாவுடன் அவரது வீட்டில் தான் சசிகலா இருந்து வருகின்றார்.

### சசிகலா

சுப்பிரமணியம் சுவாமி மற்றும் அ. தி. மு. க. அதிருப்தித் தலைவர்களைச் சந்தித்த பின்னர் நடராஜன் தனது மனைவி சசிகலாவிடம் சென்று தன்னுடன் வந்துவிடுமாறு அவரை வற்புறுத்தினார்.

ஜெயலலிதாவை எதிர்க்கத் தயாராகிவிட்டதாகக் கூறப்படும் அ. தி. மு. கவின் 35 எம். எல். ஏக்களும் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நடராஜனின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுகிறது.

— இவ்வாறு 'இண்டிபெண்டென்ற்' பத்திரிகையின் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

[இ-எ]


## பொது அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

1992 ஆம் ஆண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 30-09-92க்கு முன் அவற்றைப் பெற்றுக்கொள்ளுவதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-09-1992.

[C / 3279]



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### கேள்வி அறிவித்தல்

ஏற்கனவே எம்மால் கோரப்பட்ட நல்லூர் பொது சன நூலகக் கட்டடத் திருத்த வேலைக்கான கேள்விப் படிவங்களை வழங்கும் திகதியும், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியும் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது:-

1. கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் திகதி:- 21-09-92 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரை.
2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி:- 23-09-92 புதன்கிழமை பிற்பகல் 2 00 மணி வரை.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-09-1992.

[C / 3280]


## யாழ். மாநகரசபைப் பகுதியில்

# தடுப்பூசி ஏற்றப்படாது நூற்றுக்கணக்கான நாய்கள்

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இன்னமும் நூற்றுக்கணக்கான நாய்கள் யாழ். மாநகர சபைப் பகுதியில் தடுப்பூசி ஏற்றப்படாத நிலையில் வளர்க்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே மக்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை உணர்ந்து அனைவரும் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை தவறாது ஏற்றிக் கொள்ளவேண்டும். தடுப்பூசி ஏற்றப்படாத சகல நாய்களும் பிடித்து அழிக்கப்படும்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஐந்தாவது சுற்று நடவடிக்கையாக மாநகர சபைப் பகுதியில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

(இ-5)

# திருநெல்வேலி - நல்லூரில் நாய்களுக்கு தடுப்பு ஊசி

நல்லூர்ப் பிரதேச சபையின் திருநெல்வேலி, நல்லூர் ஆகிய இரு வட்டாரங்களிலும் எதிர்வரும் 21 ஆம் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி போடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை, சுகாதாரத் திணைக்களம், கால் நடை மிருக வைத்தியப் பிரிவு ஆகியன இணைந்து மேற்படி தடுப்பூசி ஏற்றும் திட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளன.

சம்பந்தப்பட்ட இரு வட்டாரங்களைச் சேர்ந்த சன சமூக நிலையங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் —

இந்தப் பணிக்கு சகல பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் நல்லூர்ப் பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மாசிலிங்கம் கேட்டுள்ளார்.

(இ-5)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஆங்கிரச வருடம் ஆவணித் திங்கள் 31 ஆம் நாள் (16 - 9 - 92) புதன்கிழமை முற்பகல் மணி 10. 56 முதல் 11. 22 வரையுள்ள பரணி நட்சத்திரம், துலாலக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

காலஞ்சென்ற
திரு. திருமதி செல்லையா
தம்பதிகளின் புத்திரன்
திருநிறைச் செல்வன்
**நடராஜபிள்ளை**
(S. N. பிள்ளை) அவர்களுக்கும்

திரு. திருமதி பாலவடிவேல்
தம்பதிகளின் புத்திரி
திருநிறைச் செல்வி
**ரஞ்சினி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு திருகோணமலை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் திருமணம் பெரியோர்கள் நிச்சயித்தபடி இனிது நிறைவேய்திபது என்பதை நண்பர்கள், உறவினர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்

திரு. திருமதி செ. சந்திரன்,
13 ஏகித்த றோட்
வத்தளை.

திரு. பாலவடிவேல்,
(வட. - கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி)
திருமதி மகேஸ்வரி பாலவடிவேல்,
68 A ...
திருகோணமலை.

[தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை] (22583)



## நினைவுப் பிரார்த்தனை

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில் பிரதம குருவாகவிருந்த சிவஸ்ரீ வே. சிவஞானகுருக்கள் அவர்கள் சிவபதப்பேறெய்திய நினைவுப் பிரார்த்தனையும், பஜனையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (18-09-92) மாலை 6.00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும் என்பதனை யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

க. தங்கராசா
வை: ஸ்ரீஸ்கந்தவரோதயன்
(அடியார்கள் சார்பில்)

ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்,
இணுவில்.

(22584)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்புக் குறித்து தெரிவுக்குழு அடுத்த மாதமே கூடி ஆராயுமாம்!

கொழும்பு, செப். 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு-கிழக்கு நிர்வாகத்திற்கு இணைந்த மாகாண முறையை அங்கீகரிப்பதா இல்லையா என்பது குறித்து அடுத்த மாதமே கூடி ஆராய விருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது. இனிமேல் தான் இனப்பிரச்சினை சம்பந்தமான முக்கிய விவகாரமாக இருக்கும் வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து தெரிவுக்குழு ஆராயப்போகிறது என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அடுத்த மாதம் 2ஆம், 5ஆம் திகதிகளில் தெரிவுக்குழு கூடும்போது இவ்விடயம் பற்றி ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கலின் அலகுபற்றி இத்தொடர் கூட்டங்களில் ஆராயப்படும்.

தெரிவுக்குழு கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபொழுது நிதி சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டது. இவ்விடயம் சம்பந்தமாக மீண்டும் இம்மாதம் 29 ஆம் திகதி கூடி பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ம)

## லலித் மீது தாக்குதல்:

# இரு சந்தேக நபர்களும் நீதிமன்றினால் விடுதலை

கொழும்பு கல்கிசையில் வைத்து முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி அண்மையில் தாக்கப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் லலித் அத்துலத் முதலியோ அல்லது அவரது மெய்க்காப்பாளர்களோ அந்த அணிவகுப்பில் சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட்டவில்லை. இதனையடுத்து அவர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு நீதிபதி பொலீஸாரைப் பணித்தார். (உ-ம).

## கொழும்பில் தமிழர்களை

# மிரட்டிக் கொள்ளையிட்ட குழு பொலீஸிடம் சிக்கியது

கொழும்பு, செப். 17

இரகசியப் பொலீஸார் எனக் கூறிக்கொண்டு கொழும்பில் பல தமிழர்களிடம் கொள்ளையிட்டு வந்த ஒரு கோஷ்டியை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்புக் கோட்டை, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி ஆகிய பகுதிகளில் இக்கோஷ்டி தனது கைவரிசையைக் காட்டி வந்ததாகவும்—

வெள்ளவத்தைப் பொலீஸார் இவர்களை கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பனவும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டன.

இக்கோஷ்டியைச் சேர்ந்த மேலும் இருவர் தற்போது தேடப்பட்டுவருகிறார்கள்.

கொழும்பில் அப்பாவித் தமிழர்களை தமது வாகனத்திற்கு அழைத்துச்சென்று, தாம் இரகசியப் பொலீஸார் என இனம்காட்டி, 'நீங்கள் புலிகளாக இருக்கலாம்; அடையாளத்தை நிரூபித்த பின்னர் உங்கள் பொருள்களை எடுத்துச்செல்லுங்கள்' எனக்கூறி மிரட்டி, பொருள்களை அபகரிப்பதே இவர்களது பாணியாக இருந்துள்ளது.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட பொருள்களுக்கு இவர்களே போலி பற்றுச்சீட்டுகளையும் வழங்கியுள்ளனர்.

சுமார் நூறு வழிப்பறிகளில் இக்கோஷ்டியினர் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

# பிரதேச செயலகங்களில் கம்பியூட்டர்

கொழும்பு, செப் 17

சகல பிரதேச செயலகங்களினதும் பணிகளை கம்பியூட்டர் மயமாக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இதன் பொருட்டு மின் வசதியுள்ள செயலகங்களுக்கு முதலில் கம்பியூட்டர் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

(உ-ம)

# இடம் பெயர்ந்த காரைநகர் மக்களுக்கு

யாழ்ப்பாணம், செப். 17

இடம் பெயர்ந்த காரைநகர் மக்கள் தங்களுக்குரிய நிவாரணப் பொருள்களைப் பெறுவதில் உள்ள நடைமுறைகளை சரியான முறையில் கடைப்பிடிக்க வசதியாக காரைநகர்ப்பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு தமது நிவாரண அட்டைகளை சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

(த)

# கடற்றொழில் ஊழியருக்கு 3மாதங்கள் சம்பளமில்லை

யாழ்ப்பாணம், செப். 17

யாழ் மாவட்டத்தில் கடமை புரியும் கடற்றொழில் திணைக்கள ஊழியர்கள் 18 பேருக்கும் கடந்த மூன்று மாத காலமாக சம்பளங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இது குறித்து இந்த ஊழியர்கள் யாழ். அரச அதிபருக்கு முறையிட்டுள்ளனர்.

இதே போன்று —

1990 ஆம் ஆண்டிலும் கடற்றொழில் திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருந்த போது, அவர்களுக்கு முற்பணம் வழங்குவதற்காக யாழ்.செயலக நிதியில இருந்து ஒரு லட்சம் ரூபாவை யாழ். அரச அதிபர் வழங்கியிருந்தார்.

ஆனால் அந்தப் பணம் இன்னமும் யாழ். செயலகத்துக்கு மீளளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பற்றிய விவரங்கள் அவர்களது உபகரணங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆகியன குறித்து இதுவரை மதிப்பீடுகள் செய்யப்படவில்லை என்றும் —

கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அக்கறையற்ற இப் போக்கினால் வடக்கில் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் தமது இழப்புக்களுக்கு நஷ்ட ஈடு கோர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-17)

# காணாமற்போன 60 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்

## தடுப்புக் காவலில் உள்ளனராம்

கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனதாகக் கருதப்பட்ட 60 பேர் விசேட அதிரடிப்படையினரின் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருப்பது, தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை செயலணி இவர்களைக் கண்டுபிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

இவர்களில் அனேகமானோர் தமிழர்களாவர். 57, 47, வயதுடைய இரு குடும்பஸ்தர்களும் இரு தமிழ்ப் பெண்மணிகளும் இவர்களில் அடங்குவர்.

இவர்களையும்சேர்த்து இதுவரை காணாமல்போனோர் எனக்கருதப்பட்ட 77 பேர் மனித உரிமை செயலணியினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். (உ-ம)

## ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்

# பிரேமதாஸா முதல் தடவையாக அடுத்த வாரம் வெளிநாடு விஜயம்

கொழும்பு, செப். 17

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் திரு. ஆர். பிரேமதாஸா முதல் தடவையாக அடுத்த வாரம் வெளிநாட்டுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

சார்க் அமைப்பின் தலைவரான ஜனாதிபதி பிரேமதாஸா அமைப்பின் தலைவர் என்ற முறையில் சார்க் நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

தமது விஜயத்தின் முதலாவது கட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸா இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கின்றார்.

23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் அவர் இரண்டாம் கட்டத்தில் இந்தியா, பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு செல்வார்.

மூன்றாவது கட்டமாக மாலைதீவுக்கு அவர் விஜயம் செய்வார்.

ஜனாதிபதி வெளிநாடுகளுக்கான தமது விஜயத்தை மேற்கொள்ளும் போதும் திரும்பி வரும்போதும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வழியனுப்பும் நிகழ்ச்சிகளோ அல்லது வரவேற்கும் நிகழ்ச்சிகளோ இடம்பெற மாட்டா என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸாவை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் மோட்டார் வாகன அணி நேராக அவர் பயணம் செய்யும் விமானம் அருகே போய் நிற்கும் என்று அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 17

பட்டதாரி ஆசிரியர்களுக்கான கல்விப் பின் டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்.பல்கலைக் கழகங்களில் இப்பாடநெறி தமிழ்மொழி மூலம் இடம்பெறும்.

குறிப்பிட்ட கால பட்டதாரி ஆசிரிய சேவையை பூர்த்தி செய்தோர் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 25 ஆம் திகதியாகும்.

இது தொடர்பான விவரங்கள் உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன. (உ-ம)

# இந்துப் பேரவை அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப். 17

மாதகல், மாரீசன்கூடல் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலில் தஞ்சமடைந்துள்ள சுமார் 80 குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினர் சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள், பாய்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அங்கு உரையாற்றுகையில், தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள துயரங்கள் தீர இறை வழிபாட்டில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார்.

[illegible] திரு. [illegible] பேரவையின் பணியைப் பாராட்டிப் பேசினார்.

(இ-ம)


உ

யாழ்ப்பாணம் - நல்லூர்

பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலயம்

புரட்டாதி சனிக்கிழமை

சனீஸ்வர பிரீதி ஹோமமும்

நவக்கிரஹ ஹோமமும்

பிரதி புரட்டாதி சனிக்கிழமை தோறும்
காலை 10 மணிக்கு தொடங்கி
அம்பாள், பிள்ளையார், குருவாயூரப்பன் (பெருமாள்)
அனுமான், முருகன், வைரவர், சண்டேஸ்வரி,
நவக்கிரஹம் ஆகிய மூர்த்திகளுக்கு
அபிஷேகமும் நடைபெறும்.

★ உபயம்:

1ஆம் கிழமை — செ. மகேந்திரன், 30/15, முத்துவிநாயகர் வீதி, நல்லூர்.
2ஆம் கிழமை — கிருஷ்ணா புடைவை மாளிகை, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
3ஆம் கிழமை — சோ. நவநாதன், 20, முத்துவிநாயகர் வீதி, நல்லூர்.
4ஆம் கிழமை — க. குணரெத்தினம் குடும்பம், 29, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

குறிப்பு:
அடியார்கள் பெயர், நட்சத்திரம் குறிப்பிட்டு தபால் மூலம் தெரிவிக்கவும். ஆகுதிப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபை,
கச்சேரி, நல்லூர் வீதி.

(82578)





முகமாலை

புனித
ஆரோக்கிய மாதா
(வேளாங்கண்ணி)

யாத்திரை ஸ்தலத் திருவிழா
20 — 09 — 1992

11 — 09 — 1992 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழா தினமும் 4-30 மணிக்கு திருச்செபமாலை, திருப்பலி மறையுரையுடன் நடைபெறுகிறது.

19 — 09 — 1992 சனி மாலை 6-30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம்பெறும்.

20 — 09 — 1992 ஞாயிறு காலை 5-30 மணிக்கு முதல் திருப்பலி இடம்பெறும். அதைத் தொடர்ந்து 7-30 மணிக்கு திருவிழா திருப்பலி, திருச்சொரூப பவனி, சொரூப ஆசீருடன் இனிதே நிறைவடையும்.

மரியன்னை வழியாக இறைவனுக்கு நன்றி கூற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பரிபாலகர்,
முகமாலை.

(22581)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. 17, மார்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

(22577)

புதிய முதிரை, பாலை நிலைகள், யன்னல்கள், முதிரைப் பலகைகள், பாலை தீராந்திகள் விற்பனைக்கு உண்டு. பாவித்த அலுமாரிகள், செற்றிகள், சோக்கேஸ் (Cabinet) முதலியனவும் உண்டு; கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு.

(22492)

### இலுப்பை விதை

இலுப்பை விதை வாங்கப்படுகிறது அண்ணா கோப்பி கடைகளிலும் ஏற்கப்படுகிறது. மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(சி-3271)

### தேவை

ஆலயத்தில் பலவேலை செய்வதற்கு உடனடியாக ஆள் தேவை சுயவிவரங்களுடன் நேரில் வந்து காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். பரிபாலனசபை, அரசடி விநாயகர் ஆலயம், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(22568)

எல்லா அச்சக வேலையும் தெரிந்த ஒரு பெண் ஆங்கில அச்சுக்கோர்ப்பாளர் தேவை. அனுபவ அத்தாட்சிப் பத்திரங்களுடன் 20 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். தொடர்பு: முகாமையாளர், அமெரிக்க-இலங்கை மிசன் அச்சகம், தென் இந்தியத் திருச்சபை, வட்டுக்கோட்டை.

(சி-3384)

### இடமாற்றம்

வைத்தியகலாநிதி அல் போன்சஸ் அத்தனாசியார் அவர்களின் பிரதம வைத்தியசாலை தற்பொழுது இல. 3, கண்டிவீதி, கண்டிக்குளிச் சந்தி (பஸ்தியன் அச்சகத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணத்தில் இயங்குகிறது. மருந்தெண்ணெய் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

(22552)

### DRESS MAKING

Scientific Dress Making Classes விரைவில் ஆரம்பம்; தொடர்பு கொள்க: 376, நாவலர் வீதி, நல்லூர்.

(22572)

### தவறிவிட்டது

முரசுமோட்டை பரந்தனைச் சேர்ந்த தம்பையா வேலாயுதம் என்பவருடைய அடையாள அட்டை 11-09-92 இல் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வானில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இல. 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தயவுசெய்து அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(22579)

13-09-92 இல் மகாதேவக் குருக்களுக்குச் சொந்தமான இடி முடிவடைந்த இங்கிலாந்துக் காசுக்கட்டளை ஒன்று உரிய கடிதத்துடன் தவறவிடப்பட்டுவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 83 A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(22569)

### இலிகிதர் தேவை

யாழ். நகரில் பிரபல்யமான கிருடியோவிற்கு ஆங்கில அனுபவம் உடைய இலிகிதர் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. மே/பா, இல:860, உதயன், யாழ்ப்பாணம்.

(சி-3383)

### இலவச திருமண சேவை

வயது39, ஆயிலியம், உதயச் செவ்வாய், படித்த மணப்பெண்ணுக்கு மணமகனும், 44 வயது அத்தம், செவ்வாய் - 8 இரண்டாம் தரம் A-பிரிவு இலிகிதருக்கு மணமகளும் தேவை. மாற்றுச் சம்பந்தமும் ஏற்கப்படும், சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (5325)

## குண்டு துளைக்காத கார்

சென்னையில் குடியேறி வசித்து வரும் முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுக்கு குண்டு துளைக்காத கார் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

டில்லியிலிருந்து விமானம் மூலம் இக் கார் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டது.

## ஜெரி சில்வா வவுனியாவில்

வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கடந்த திங்களன்று வவுனியாவுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டார். அங்கு படை உயரதிகாரிகளுக்கான மகாநாடொன்றையும் அவர் நடத்தினார். [உ-ம]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**N. S. வைத்திலிங்கம்**

(லொறி உரிமையாளரும், பிரபல வர்த்தகரும்)

அன்பினாலும் பண்பினாலும் அயராது உழைத்து, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

பிள்ளைகள்,
சகோதரர் N. S குமாரசாமி
குடும்பத்தினர்.

74, சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(22576)

## இறைவனில் இணைந்த 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணின் மைந்தனாக: 07 — 10 — 1980



விண்ணின் மைந்தனாக: 19 — 08 — 1992

செல்வன்

**உ. றஸ்கின் றோகேந்திரகுமார்**

(றோகன்)

"இறைவனில் உறைவது ஒன்றே - உன் மன நிறைவும் மகிழ்வும் ஆகட்டும்"

பன்னிரு வயது வரை
பாசமுடன் வாழ்ந்து வந்து
கன்னிமரி வேசுவிடம்
சாற்றாய்ப் பறந்தனையோ!
உன் இனிய மழலை மொழி
ஓசை எங்கும் கேட்குதையா!
எண்ணி எண்ணி ஏங்குகிறோம்
ஏனித்த வாழ்வென்று!

இவரின் ஆன்ம சாந்தித் திருப்பலி 1992-09-18 (வெள்ளிக்கிழமை) காலை 6-00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

இத் திருப்பலியில் பங்குகொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படியும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் உபசரணையில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்பு "றோகன்" இன் பேரிழப்பின் போது ஆறாத்துயரில் நேரில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் அளித்த யாழ். புனித பத்திரிசியார் ஆடும் பத்தவர்கள், மற்றும் குருக்கள், கன்னியர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினரும் உறவினர்களும்.

136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

நெடியகாடு
வல்வெட்டித்துறை.

(22580)

‘ஹெல உறுமய’ தலைவரை விலக்கல்:

## சுதந்திரக் கட்சிக்குள் கொந்தளிப்பு நிலை

கொழும்பு, செப். 17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இயங்கிவரும் 'ஹெல உறுமய' குழுவின் தலைவரும் எம். பியுமான திலக் கருணாரத்னாவை கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்க எடுக்கப்பட்ட முடிவை கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்த்து வருவதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இவ்விவகாரத்தினால் சுதந்திரக் கட்சியினுள் மீண்டும் கொந்தளிப்பு நிலையொன்று உருவாகி வருவதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது. [உ-ம]

உ

சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மஹா சண்டிஹோம அழைப்பு

அன்புடையீர்!

திருக்கணித பஞ்சாங்கப்படி வியாழனது மாற்றம் **11 — 09 — 1992** அன்று ஏற்படுவதை முன்னிட்டு நாட்டின் நன்மை கருதியும், கீழே கொடுக்கப்பட்டுள்ள நஷத்திரத்திற்குரிய தோஷம், உடையவர்கள் பங்குபற்றவும் மேலே குறிப்பிட்டுள்ள சண்டிஹோமம் சென்ற வருடத்திலும் பார்க்க வெகு சிறப்பாக நடைபெறும்.

**20-09-1992 முதல் 22-09-1992 வரை**

(ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை)

★ கணபதிஹோமம் ★ நவக்கிரகஹோமம் ★ துர்க்காஹோமம் ★ சண்டிஹோமம்

என்பன தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்:

தோஷமுடையவராகக் கருதப்படுபவர்களது நட்சத்திரங்களாவன:

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால், புனர்பூசம் 4 ம் கால், பூசம், ஆயிலியம், உத்தரம் 2,3 4 - ம் கால்கள், ஹஸ்தம், சித்திரை 1,2 ம் கால்கள், மூலம், பூராடம், உத்தராடம் 1 - ம் கால், அவிட்டம் 3,4, - ம் கால்கள், சதயம் பூரட்டாதி 1,2,3 - ம் கால்கள்

இந்த உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடிய விரைவில் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும். அடியார்கள் அனைவரும் மூன்று நாட்களும் தொடர்ந்து காலை, மாலை பங்குபற்றி மூன்றாம் நாள் காலை ஆயிரத்தெட்டு பால்செம்பு எடுத்து அம்பிகைக்கு பாலபிஷேகம் செய்ய உதவுக.

இத்தினங்களில்
"அம்பிகையின் பெருமை"
பற்றிய சமயச் சொற் பொழிவுகள் இடம் பெறும்.

நிகழ்த்துபவர்:

மெய்ஞான வாரிதி
செஞ்சொற் கொண்டல்
பிரம்ம ஸ்ரீ சபாரத்ன ஈஸ்வரசர்மா
அவர்கள்

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

இங்ஙனம்;
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா,
தர்மகர்த்தா.

19-08-1992.

(22415)

## பட்டப்பின் படிப்புக் கல்வி டிப்ளோமா பகுதி நேரம் / முழுநேரம் - பரீட்சைகள்-1991

மேற்படி பரீட்சைகள் 4 - 11 - 1992 அன்று ஆரம்பமாக உள்ளன. பரீட்சை அனுமதி அட்டையும், நேர அட்டவணையும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும். கிடைக்கப் பெறாதவர்கள் 4 - 11 - 1992க்கு முன்பு பரீட்சைக் கிளையில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

- பதிவாளர்.

(சி-3278)

## மின்பிறப்பாக்கி (Generator) தேவை

5 K. W. அல்லது 2 K. W. வலுவுடையதும், நல்ல நிலையில் உள்ளதுமான

மின்பிறப்பாக்கி தேவை.

முழுவிபரங்களுடன் 25 - 09 - 1992 க்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
மே/பா, உதயன்.

(சி-3277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஐ. நா. அதிகாரிகளுக்கு இது பெரும் சவால்!

தமிழகத்தில் இருந்து ஈழத் தமிழ் அகதிகளை திரும்ப அனுப்பும் விவகாரம் தெளிவில்லாத, குழப்பமான ஒழுங்கு முறையில்லாத, சிக்கலான விடயமாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவும் ஸ்ரீலங்காவும் தாம் செய்து கொண்ட ஏற்பாட்டின் பிரகாரம் அகதிகளை திரும்ப அனுப்புவதற்கு முதலில் எடுத்துக் கொண்ட முயற்சி முழுத்தோல்வி அடைந்தது.

அதன் பின்னர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் இவ்விடயத்தில் தலையிட்டது. தமது விருப்பத்தின் பேரில் இலங்கை திரும்பும் அகதிகளை மட்டுமே இங்கு வருவிப்பதென்ற கொள்கையுடன் ஐ. நா. செயற்படத் தொடங்கியது.

எனினும் ஈழத் தமிழ் அகதிகளை இந்திய அரசு — தமிழக அதிகாரிகள் — பலவந்தப் படுத்தியே அனுப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக் குறையவில்லை. அதுவே உண்மை நிலையுமாக இருந்தது.

ஈழ அகதிகள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படுவதால் அதற்குத் தடை விதிக்கக் கோரி தமிழர் அபிமானிகள், மனிதாபிமானிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். அதனைத் தொடர்ந்து நீதிமன்றம் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்குத் தடை விதித்திருந்தது.

ஆனால் தமிழக அரசு சொந்த விருப்பத்தின் பேரிலேயே ஈழ அகதிகளைத் தான் திருப்பி அனுப்புவதாகப் பதில் தாக்கல் செய்து, தடை உத்தரவை நீக்கச் செய்வித்து மீண்டும் அகதிகளை அனுப்பத் தொடங்கி இருக்கிறது.

எப்படியும், என்ன பாடுபட்டும் ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று தமிழக அரசு மிகவும் அவசரப்படுகிறது.

இந்த அவசரம் இருக்கும் வரைக்கும் ஜெயலலிதா அரசு ஈழத்தமிழர்களை பலவந்தப் படுத்தியே அனுப்பும் என்பது வெளியம்பலமான ஒன்று.

இடைத்தங்கல் முகாம்களில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் இருப்பதால், தமிழக அரசு வெளிப்படையாக ஈழ அகதிகளை பலவந்தப்படுத்தவில்லை. ஆனால், அகதி முகாம்களில் தங்கியிருந்து தொந்தரவுகளை எதிர்கொள்வதைவிட, தாயகத்தில் என்ன பிரச்சினைகள், ஆபத்துக்கள் இருந்தாலும் அங்கு போய்விடுவதே மேலானது என்று அகதிகள் தாங்களாகவே முடிவு செய்யத் தூண்டும் விதத்தில் தமிழக அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். அதாவது அகதிகளை எவ்வாறேனும் வெளியேற்றிவிட தமிழக அரசு மறைமுகமாக நடவடிக்கை எடுத்து வருகிறது— இவ்வாறு தமிழகத்தில் உள்ள அவதானிகள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

எனவே ஐ. நா. இதுவிடயத்தில் தனது கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாமல் தமிழக அரசிடம் தோற்றுப் போயிற்று என்பதேஎமது மதிப்பீடாகும். திருமலை வந்துள்ள அகதிகளை நேரில் சந்திப்பதற்காக ஐ. நா. அதிகாரிகள் இன்று கொழும்பிலிருந்து அங்கு செல்லவிருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அகதிகள் இங்கே திரும்பிய பின்னர் சரி, பிழை பார்ப்பதால் பயனில்லை.

ஈழ அகதிகள் உண்மையாகவே சொந்த விருப்பத்தின் பேரில் தான் வரச் சம்மதிக்கிறார்கள் என்பதனை அக்கரையிலேயே உறுதி செய்து கொள்ள வேண்டும் ஐ. நா. அதிகாரிகளால் முடியுமா? இது அவர்களுக்குத் தமிழக அரசு விடுத்துள்ள பெரும் சவாலாகும்!

# கிளிநொச்சி இடம்பெயர்ந்த மக்களின் பதிவில்லா, வெளிப்படா மரணங்கள்!

## நிவாரண வெட்டு மேலும் பலரைச் சாகடிக்கும்

நிவாரண வெட்டைக் கண்டித்துக் கடந்த திங்கட்கிழமை (14-9-92) இல் கிளிநொச்சி மக்கள் அரசாங்க செயலகத்தின் முன்னால் மறியல் போராட்டம் நடத்தினர்.

மறியல் போராட்டம் முடிந்து மக்கள் சார்பில் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று அரச அதிபரின் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது. அந்த மகஜர் இங்கே முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவின் வடக்கில் உள்ள மிகவும் பின்தங்கிய மாவட்டமான கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தங்களது மேலான கவனத்துக்குத் தர விரும்புகிறோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் 1958 முதல் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பல இன வன்செயல்களால் தங்களது உறவினர்களையும், சொத்துக்களையும் இழந்து ஸ்ரீலங்காவின் ஏனைய பிரதேசங்களில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதில் நம்பிக்கையை இழந்து தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் இங்கு வந்து குடியேறியவர்களே.

ஸ்ரீலங்காவில் மிகவும் பின்தங்கியதோர் மாவட்டமான கிளிநொச்சியில் கல்வி, சுகாதாரம் மருத்துவம் உட்பட்ட எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலும் இங்கு வாழும் மக்கள் தமது உழைப்பால் ஸ்ரீலங்காவின் உணவுத் தேவையின் கணிசமான பகுதியை (நெல்) உற்பத்தி செய்யும் தொழிலாளர்களாக, விவசாயிகளாக வாழ்ந்துள்ளார்கள். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலும் தமது உழைப்பால் ஸ்ரீலங்கா அரசிற்கான பெருமளவு அந்நியச் செலாவணியை மிகைப்படுத்தி வந்துள்ளபோதும் கிளிநொச்சி மக்கள் தமது வாழ்க்கையை வறுமையுடனேயே போக்கி வந்துள்ளனர்.

### விவசாயம் சரிந்தது

1990ஜூன் மாதம் ஏற்பட்ட யுத்தம் இவர்களது வாழ்க்கையில் மேலும் சோதனையாக அமைந்துள்ளது. எரிபொருள், விவசாய இரசாயனங்கள், விவசாய உபகரணங்கள் தடை செய்யப்பட்டமையால் விவசாயச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்கள் முற்றாகத் தொழில் இழக்க வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1990ஜூனிமுதல் நடைபெற்ற பல இராணுவ நடவடிக்கைகளால் பெருமளவு மக்கள் மேலும் ஒருமுறை தமது உறவினர்களையும், சொத்துக்களையும் இழந்து உடுத்த உடையுடன் உயிரைப் பாதுகாப்பதற்காக முகாம்களை நாடி ஓட வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 29,300 ஆகும். அவர்களில் 10,000 குடும்பங்களுக்கு மேல் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் அனைவருக்கும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் கூட இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரால் 7,659 குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிக்கும் விடயத்தில் அரசாங்க அதிபர் எதுவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இவர்களுக்கான குடியிருப்பு வசதிகள் இதுவரை வழங்கப்படவில்லை. மருத்துவம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் பெறுவதற்கான எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லை.

### பதிவில்லா மரணங்கள்

இடம் பெயர்ந்த மக்களுடைய உணவுப்பற்றாக்குறை, சுகாதாரச் சீர்கேடு, மருத்துவ வசதியில்லாமை மிகப் பெரியளவில் குழந்தைகள் மரணத்தையும், குறைப் பிரசவங்களையும், தாய்மார்களது மரணங்களையும் ஏற்படுத்தி வருகிறது. இன்றைய யுத்தச் சூழ்நிலைகள், போக்குவரத்து வசதிகள் இல்லாமை, அரச திணைக்களங்களின் சேவைகள் சீரில்லாமை ஆகிய காரணங்களால் இறப்புக்கள் பதிவில்லாது வெளிப்படாமலே நடைபெறுகின்றன.

இப்படியான சூழ்நிலையில் நிவாரணத்தை அரைப்பங்காக குறைப்பதாக தங்களுடைய அரசு எடுத்துள்ள முடிவானது கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்களை மிகவும் கடுமையாகப் பாதிக்கும். மரணவிகிதத்தை வெகுவாக அதிகரிக்கச் செய்யும் என்பதை தங்களுடைய கவனத்துக்குத் தர விரும்புகிறோம்.

தொடர்ச்சியாக இலவச நிவாரணத்தை வழங்குவதில் சிரமங்களை நாங்கள் உணர்கிறோம். இங்குள்ள இடம் பெயர்ந்த மக்களும் தொடர்ந்தும் இலவச நிவாரணத்தையே எதிர்பார்ப்பவர்களாகவும் இல்லை.

### இனப்படுகொலை ஆகும்

இன்று நடைபெற்று வருகின்ற அர்த்தமில்லாத - முடிவற்ற — யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து பொருளாதாரத் தடைகளை நீக்கி இடம்பெயர்ந்த மக்களுக்கான புனர்வாழ்வு உதவிகளை வழங்கி உதவுவீர்களாயின் கிளிநொச்சி மாவட்ட மக்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

மேற்படி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் வரையான காலத்தில் நிவாரணத்தை நிறுத்த எந்த தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக தாங்கள் நடவடிக்கை எடுத்தாலும் அது மனிதாபிமானமற்றதாகவும், மோசமான, மறைமுகமான இனப்படுகொலையாகவுமே அமையும். ★

## கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்கள் புனரமைப்பு!

முறிகண்டி, செப். 17

காலபோக நெற்செய்கைக்காக கிளிநொச்சியிலுள்ள பிரதான குளங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளின் ஆரம்பக்கட்டமாக புதுமுறிப்புக் குள அணைக்கட்டு திருத்தியமைக்கப்பட உள்ளதாகவும்—

அதனைத் தொடர்ந்து பிரதான நீர்ப்பாசனக் குளங்கள் திருத்தியமைக்கப்படும் என்றும்—

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (த-97)

## கோப்பாய் கோமான் நினைவு தினம்

தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த பழைய தலைமுறைத் தலைவர்களில் கோப்பாய் கோமான் வன்னியசிங்கமும் ஒருவர். அவரது 33 ஆவது மறைவு தினம் இன்று செப்டம்பர் பதினேழாம் திகதியாகும்.

எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியனவற்றைச் சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாதிருக்கப் போராடுவது தேசத் துரோகமானால்—

தமிழர்களுக்குத் தனியரசு காணப் போராடுவது தேசத் துரோகமானால்—

தமிழ்த் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமைக்கும் போராடுவது தேசத் துரோகமானால் —

இத்தனை தேசத் துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அவற்றின் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே அன்றி எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு, அது சிதைந்து, சீரழிந்து காலப்போக்கில் அழிந்து போவதைச் சகிக்க மாட்டேன். இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத் துரோகியெனக் குற்றஞ்சாட்டப்பட்டு, தூக்குக் கயிற்றில் தொங்கவிடப் படுவதையே நான் வரவேற்கிறேன் - என்று நாடாளுமன்றத்தில் கர்ச்சித்தவர் அவர். ★

### திலீபன் நினைவாக

## இன்று இடம் பெறும் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், செப். 17

தியாகி லெப். கேணல் திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:

தீவகக் கோட்டம்— வலிதா குடியிருப்பு, வடமராட்சிக் கோட்டம் — அல்வாய் வடக்கில் பாபு வீதி புனரமைத்தல், தென்மராட்சிக் கோட்டம்— பளை அரசினர் வைத்தியசாலை தெ. ப. பொ. கூ. சங்கத்தினரால் செப்பனிட்டு திருத்தப்படும். கொடிகாமத்தில் கரம்பகம் வீதி அப்பகுதி மக்களினால் திருத்தியமைக்கப்படும்.

இதே வேளை—

திலீபன் நினைவாகக் கடற்புலிகளின் அனுசரணையுடன் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டு வரும் நிகழ்ச்சிகளில் இன்று—

வடமராட்சி முனை சென். தோமஸ் தேவாலயத்திற்கு அருகிலும், குடத்தனை நினைவுத்தூபிக்கு அருகாமையிலும் மற்றும் குருநகர் தெல்லிப்பழையிலும் தியாகி திலீபன் நூல் நிலைய முன்றலிலும் இடையாள உண்ணாவிரதம், அஞ்சலிக் கூட்டம் என்பன இடம் பெறும்.

[த-ம-144]

## 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் பேனா நண்பர் தொடர்புகொள்ளலாம்

அமெரிக்காவில் வாழும் 50 வயதிற்கு மேற்பட்ட 'மூத்த பிரஜைகள்' ஏனைய நாடுகளில் உள்ள தம்மைப் போன்ற மூத்த உறுப்பினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு உதவும் நோக்குடன் ஒரு 'சர்வதேச மூத்த பேனா நண்பர்கள்' தொடர்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சகல நாடுகளிலும் உள்ள 50 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலத்தில் எழுதக் கூடிய ஆண், பெண் எவராவது அமெரிக்காவில் ஒரு பேனா நண்பரோடு கடிதங்கள் மூலம் கருத்துக்களைப் பரிமாற விரும்பினால், தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இந்த அமைப்பு கேட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தமது பெயர் முழுமுகவரி, ஆணா, பெண்ணா போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு, International Senior Pen Pals, RR3 Box 220, Waseca, Minnesota. U. S. A. என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த-10]

## இரணைதீவு மக்களுக்கு 1 மாத நிவாரணம் மட்டுமே

முறிகண்டி, செப். 17

கடந்த கால இராணுவ வன் செயல்களால் இரணைதீவில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது நாச்சிக்குடாவில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு மாதத்திற்கு மட்டுமே நிவாரணம் வழங்க அரசு இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த இரணைதீவு மக்கள் மீண்டும் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வரை அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட வேண்டும் என்று கிளிநொச்சி அரச அதிபர் திரு. பொன்னம்பலம் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தார் என்றும்—

ஆனால் மேற்படி அமைச்சின் செயலாளர் திரு. விறிஸ்டி சில்வா ஒருமாத உணவு விநியோகத்திற்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த-97]

### அகதிகளுக்கு உதவி

குருநகர், செப். 17

யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் சுமார் ஆயிரத்து 725 குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக உலர் உணவு வகைகளை வழங்கியுள்ளது.

மேலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து சமைத்த உணவு வகைகளையும் நடுநிலையம் வழங்கி வருகிறது.

[த-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணவெட்டை எதிர்த்து முல்லையில் நேற்று பேரணி

புதுக்குடியிருப்பு, செப். 17

அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை அரசு அரைவாசியாகக் குறைத்ததை ஆட்சேபித்து முல்லைத்தீவில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடந்தது.

நேற்றுக்காலை புதுக்குடியிருப்பு கந்தசாமி கோவிலடியில் இருந்து ஆரம்பமான பேரணி முல்லைத்தீவு பிரதான வீதி வழியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்றலை அடைந்து பின் அங்கிருந்து திலீபன் வீதி வழியாக உதவி அரச அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது.

மூன்று மைல் நீளமான பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுலோக அட்டைகளும் பேரணியில் கொண்டு செல்லப்பட்டன.

பேரணியின் முடிவில் முல்லைத்தீவு மக்களின் சார்பில் ஒன்றும், மற்றும் வெகுஜன அமைப்பு ஒன்றியத்தின் சார்பில் ஒன்றுமாக இரு மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட அந்த மகஜர்கள் முல்லைத்தீவு அரச அதிபரின் பிரதிநிதி நிர்வாக உத்தியோகஸ்தர் திரு. எஸ். இருளை பிள்ளையிடம் கையளிக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, உடையார்கட்டு போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களும் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கு தங்கி இருக்கும் மக்களும் பெரும் எண்ணிக்கையில் பேரணியில் கலந்து கொண்டனர்.

[இ-5-126]

'சைக்கோ' மூலம் புகழ் பெற்ற

## ஹொலிவூட் நடிகர் பெர்க்கின்ஸ் எய்ட்ஸ் நோயினால் மரணமானார்

லொஸ் ஏஞ்செலீஸ், செப். 17

பிரபல ஹொலிவூட் நடிகர் அந்தோனி பெர்க்கின்ஸ் எய்ட்ஸ் நோயினால் கடந்த சனிக்கிழமை மரணமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 60.

திகில் படங்களை எடுப்பதில் மன்னனாகக் கருதப்பட்ட அல்பிரட் ஹிச்கொக் தயாரித்த பிரபல மர்மப்படமான 'சைக்கோ'வில் கொலைகார ஹோட்டல் உரிமையாளராக நடித்துப் புகழ் பெற்றவர் அந்தோனி பெர்க்கின்ஸ்.

தாம் உயிரிழப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் அந்தோனி பெர்க்கின்ஸ் தமது உடல் நிலை குறித்து அறிக்கை ஒன்றை தயாரித்து வைத்து இருந்தார்.

அந்த அறிக்கை அவரின் மரணத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருக்கிறது.

''கடவுளின் பழிவாங்கலே எய்ட்ஸ் நோய் என்று நம்புபவர் உள்ளனர்.

''மனிதர்கள் பரஸ்பரம் அன்பு செலுத்துவது எப்படி, புரிந்துணர்வுடன் கருணையுடன் வாழ்வது எப்படி என்பதை மக்களுக்கு உணர்த்தவே எய்ட்ஸ் நோய் அனுப்பப்பட்டிருப்பதாக நான் நம்புகின்றேன்.

''மூழ்த்தறப்பு, போட்டி நிறைந்த உலகில் வாழ்ந்ததை விட எய்ட்ஸ் நோய் பரவும் உலகில் நான் சந்தித்தவர்களிடம் இருந்து மனித புரிந்துணர்வு, தன்னலமற்ற தன்மை மற்றும் அன்பு ஆகியவற்றை அதிகமாகப் படித்திருக்கின்றேன்''

இப்படி அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பெர்க்கின்ஸுக்கு எய்ட்ஸ் நோய் எப்படி ஏற்பட்டது என்ற விவரத்தை அவரது குடும்பவட்டாரங்கள் தெரிவிக்கவில்லை.

15 வயதில் நடிக்கத் தொடங்கிய பெர்க்கின்ஸ் 'சைக்கோ' படத்தின் மூலம் ஹொலிவூட்டின் புகழ்பெற்ற நடிகரானார். [இ-எ]

### திலீபன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய சாலையும் சிரமதானப் பணிமூலம் திருத்தப்பட்டன.

பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் பொலிகண்டிப் பகுதியிலும் சிரமதானப் பணி இடம் பெற்றது.

பொது மருத்துவ மனைகளில் இரத்ததானம் செய்வதிலும் மக்கள் ஈடுபட்டனர்

(அ-5-17 51-72-15)

### சிவில் நிர்வாகத்தை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோசடி என்று ரெலோ பேச்சாளர் சொன்னார்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கருத்து வெளியிடுகையில்—

தமது பிரசாரத்துக்கு உதவுவதற்காக, ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பைச் சேர்ந்த ஒருவரைப் பிடித்து திருகோணமலையில் செயற்பட வைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது — என்று குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு இயங்காது இருக்கும் இந்த நேரத்தில் ராஜகாரியர் திருகோணமலையில் இருந்து கொண்டு என்ன கடமைகளைச் செய்யப்போகிறார் என்பது எமக்குத் தெரியவில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எப். பேச்சாளர் எல். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த ஓராண்டு காலமாக ராஜகாரியர் அவரது சொந்தக் கட்சியின் விசாரணை ஒன்றை எதிர்நோக்கி வந்திருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு 'ஐலண்ட்' செய்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

### தமிழக சட்டசபை கூட்டத்தொடர்

சென்னை, செப். 17

தமிழக சட்டசபையின் மழைக்காலக் கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது;

சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா இத்தகவலை வெளியிட்டார். [இ-எ]

### ஜெயலலிதா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திடம் காணியை விற்கவோ வாங்கவோ கூடாது என்ற விதியை இதன் மூலம் முதலமைச்சர் மீறிவிட்டார் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது

மதுரையில் அ.தி.மு.க. நடத்திய வெற்றி விழாவில் முதலமைச்சர் பேசும்போது இதனை ஒத்துக் கொண்டார் என்றும் —

எந்த விஷயத்துக்கும் 10 சதவீத கமிஷன் கேட்கும் ஜெயலலிதா அரசு '10 வீத அரசு' என்ற பட்டப் பெயரைப் பெற்றிருக்கிறது என்றும் —

ஊழல் என்ற நாசகாரக் கிருமி நல்ல நிர்வாகத்துக்குச் சாவு மணி அடித்து விட்டது என்றும் —

அபிவிருத்தி நடவடிக்கைகள் எல்லாம் தடைப்பட்டு விட்டன என்றும் — கூறப்பட்டிருக்கிறது.

அத்துடன் அந்துலே வழக்கில் இந்திய உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்த கருத்துகள் தி.மு.க.வின் மனுவில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

இப்படியான ஒரு விஷயத்தில் ஆளுநர் தானாகவே ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அமைச்சர்களின் தனிப்பட்ட சுயநல செயல்களுக்கு அவரும் ஒரு கருவியானதாகக் கருதப்படுவார் என்று அந்துலே வழக்கில் நீதிமன்றம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது (இ-எ-10)

### பலாலி முகாமிலிருந்து ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், செப். 17

பலாலி முகாம் பகுதியில் இருந்து நேற்று நண்பகல் வேளை படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். ஏழாலை, தெல்லிப்பழை பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை வேளை வளலாய்ப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலின்போது துப்பாக்கி வேட்டுக்கள் அச்சுவேலிப் பகுதியில் வந்து விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் செவ்வாய் இரவு வளலாய் இராணுவ முகாமில் இருந்து பராவெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு சுற்றுப்புற கிராமங்களை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமில் இருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

இச்சம்பவத்தால் இடைக்காடு, கதிரிப்பாய் பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன. [இ-15-5]

### செய்மதி மூலம் ஆசியாவுக்கான ஒளிபரப்பு

செய்மதி மூலம் ஆசியா முழுவதற்குமான தொலைக்காட்சிச் சேவை ஒன்றை அவுஸ்திரேலியா இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்க உள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்த ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கழகத்துக்கு அரசு 54 லட்சம் டொலர் நிதியை ஒதுக்கியுள்ளது

ஆஸ்திரேலியாவின் வட பகுதியில் உள்ள டார்வின் துறைமுக நகரிலிருந்து இந்தோனேஷிய செய்மதியான 'பலப்பா' மூலம் இத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

### காவலர் இல்லா நாவலர் மண்டபம்

நாவலர் கலாசார மண்டபம், தொல்பொருள் காட்சியகம் ஆகியன ஒரே வளவில் இருந்தாலும் பல இரவுகளில் அவை காவலர்கள் இல்லாமலே இருப்பதாகப் புகார் செய்யப்படுகிறது.

குறிப்பாக நாவலர் கலாசார மண்டபத்தில் இரவுக் காவலர்கள் இருப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு பத்து மணியளவில் எமது செய்தியாளர் அங்கு சென்றபோது காவலர் எவரும் கடமையில் இருக்கவில்லை! வெளிக் ''கேற்'' திறக்கப்பட்டிருந்தது.

நாவலர் பெருமானின் சிலை வைக்கப்பட்டிருக்கும் அறையும் திறந்திருக்கக் காணப்பட்டது.

தமது பெறுமதியான தேடற்கரிய அருங்கலைப் பொக்கிஷங்களுடன் மாமனிதர் கலைஞானியே காவல் காத்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

(அ-5)

### யாழ். மாவட்டத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். விவசாயிகள் தமது நெற் காணிகள் அமைந்துள்ள கமநலச்சேவை நிலையங்களில் நெற் காப்புறுதிக்கான கட்டுப்பணத்தை இறுதி விதைப்பு நாளான அக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் செலுத்துதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பன் கமநலச்சேவை பகுதிக்கு மட்டும் இறுதி விதைப்பு தினம் நவம்பர் மாதம் 15 ஆம் திகதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையின் மூலம் இடம் பெயர்ந்துள்ள கீரிமலை, புங்குடுதீவு, வேலணை கமநலச் சேவை பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து நெற் காப்புறுதிக் கோரிக்கை ஏற்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தாழ்நில நெற்காணிகளை உள்ளடக்கியுள்ள நல்லூர் தொல்புரம், அம்பன் கமநலச்சேவைப் பகுதிகளுக்கு 1992/93 கால போகத்திற்கு ஏக்கருக்கான கட்டுப்பணம் 66 ரூபாவாகவும் முழு அழிவுக்குமான நட்ட உத்தரவாதம் 1100 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உயர்நில பிரிவின் கீழ் வரும் சாவகச்சேரி, கைதடி, உடுவில், புத்தூர் நீர்வேலி, உரும்பராய், புலோலி பிரிவுகளுக்கான கட்டுப்பணம் 84 ரூபாவாகவும் நட்ட உத்தரவாதம் 1700 ரூபாவாகவும் இருக்கும். (இ-ம)


# இடமாற்றம்

மாரீசன்கூடல் இளவாலையில் இயங்கி வந்த

★ லூக் வைத்தியசாலை ★

இராணுவ நடவடிக்கை காரணமாக சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. யோ. செல்வராசா,
D.A.M.&S (Cey.)

[22582]



தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடம்

உபபரிசோதகர் / காவலர் தரங்கள்

தகமைகள்:- 8 ஆம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) வரை.

உயரம்:- 5' 6''

வயது:- 18—30 வரை.

மேற்கூறிய தகமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 21-09-92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும் தபால் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(இ/3275)



# மரண அறிவித்தல்

## சரவணமுத்து சின்னத்தங்கம்

சின்னத்தங்கம் 16-09-92இல் காலமாகிவிட்டார். இவர் ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், கந்தசாமி, சுப்பிரமணியம், திருநாவுக்கரசு, மகாலிங்கம், குலமணிதேவி, ஜெயானந்தம், நவசிவாயம் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப. (17-09-92) 3.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. நமசிவாயம்
(மகன்)

12/2, 3ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

[22585]

## சுப்பிரமணியம் சண்முகராஜா

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கானை - தொட்டிலடியை வதிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பிரமணியம் சண்முகராஜா காலமாகிவிட்டார். இவர் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதாம்பவ், அரவிந்தன், கெங்கேஸ்வரி, டிசாந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுமதி, ஏகாம்பரம் (டென்மார்க்) வசந்தகுமாரி, ஞானசேகரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-9-92 வெள்ளிக்கிழமை சங்கானை விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கானை,
தொட்டிலடி.

தகவல்:
திருநாவுக்கரசு
(மைத்துனர்)

[22587]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org